## நெல்லையில் பா.ஜ.க. – அ.தி.மு.க.வைச் சேர்ந்த

# 1000க்கும் மேற்பட்டோர் கழகத்தில் இணைந்தனர்!

### கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில்








நெல்லை, பிப்.8–

**‘திருநெல்வேலி மாவட்டக் கழக நிர்வாகிகள் சந்திப்பு’ நிகழ்ச்சியில் கலந்துகொள்ள நெல்லை சென்றுள்ள முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் திருநெல்வேலி மாவட்ட பா.ஜ.க. மற்றும் அ.தி.மு.க.வைச் சேர்ந்த நிர்வாகிகள் உள்ளிட்ட 1000க்கும் மேற்பட்டடோர் தி.மு.க.வில் இணைந்தனர்.**

‘திருநெல்வேலி மாவட்டக் கழக நிர்வாகிகள் சந்திப்பு’ நிகழ்ச்சியில் கலந்து கொள்ள நெல்லை சென்றுள்ள தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், திருநெல்வேலியில் நேற்று முன்தினம் (06.02.2025) மாலை, திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த பா.ஜ.க.வைச் சேர்ந்த மாவட்ட தலைவர் ஏ.தயாசங்கர், மாவட்ட பொதுச்செயலாளர் வேல் ஆறுமுகம், மாநில பொதுக்குழு உறுப்பினர் வி.மீனாட்சிசுந்தர், மாவட்ட விவசாய அணி தலைவர் சி.முருகன், மாவட்ட சிறுபான்மை தலைவர் என். இசக்கார் ராஜ்பால், மாவட்ட பொருளாதார பிரிவு தலைவர் எஸ்.சபரிமலை வாசன், மாவட்ட ஊடக பிரிவு தலைவர் எஸ்.மாரியப்பன், திருநெல்வேலி நகர் கிழக்கு மண்டல தலைவர் இ.இசக்கி அய்யப்பன், தச்சநல்லூர் வடக்கு மண்டல தலைவர் எம். பிரேம்குமார், மானூர் மத்திய ஒன்றிய தலைவர் கே.ரவி, நெல்லை நகர் மண்டல முன்னாள் தலைவர் டாக்டர் சி.பொன்னம்பலவாணன், மாவட்ட விவசாய அணி ஐடி பிரிவு எம்.லெட்சுமணன், மாவட்ட ஓபிசி அணி செயலாளர்கள் ஏஆர்சுந்தராஜ், ஏ.அருண்செல்வம், மாவட்ட விவசாய அணி துணைத் தலைவர் பி.பாலன், மாவட்ட விவசாய அணி செயலாளர்கள் என்.ரூபன், எஸ்.நடராஜன், மாவட்ட தமிழ் வளர்ச்சி பிரிவு துணைத் தலைவர் ஆர்.கார்த்திக், மாவட்ட பொருளாதார பிரிவு துணைத் தலைவர் எம்.வெங்கடேஷ், மாவட்ட பொருளாதார பிரிவு செயலாளர்கள் எஸ்.ஆறுமுகம், ஏ.ஆர்.சேதுராமன், எஸ்.துரை சண்முகவேல், சி.செல்வராஜ், பி.லட்சுமணன் மற்றும் அ.தி.மு.க.வைச் சேர்ந்த ஒன்றிய எம்.ஜி.ஆர். மன்ற இணைச் செயலாளரும் - திருக்குறுங்குடி பேரூராட்சி மன்ற தலைவரும் - கூட்டுறவு சங்க தலைவருமான இ.இலங்காமணி மற்றும் ச.மாணிக்கராஜா, எஸ்மணிகண்டன், எஸ்.இசக்கிதுரை, சு.வெள்ளைபாண்டி, எம்.மாரியப்பன், எம்.ஐகோர்ட் மகாராஜா, எஸ்.உதயகுமார், ஆர்.முத்துப்பாண்டி, வி.இசக்கிராஜ், வி.உதேஷ் உள்ளிட்ட 1000-க்கும் மேற்பட்ட பா.ஜ.க. மற்றும் அ.தி.மு.க. கட்சியினர் தி.மு.க.வில் இணைந்தனர்.

அதுபோது கழகப் பொதுச்செயலாளர் - அமைச்சர் துரைமுருகன், முதன்மைச் செயலாளர் - அமைச்சர் கே.என்.நேரு, திருநெல்வேலி கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன், திருநெல்வேலி மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான், நெல்லை மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன் மற்றும் கழக நிர்வாகிகள் ஆகியோர் உடனிருந்தனர்.

## திருநெல்வேலியில் – முதல்வர் மு.க.ஸ்டாலின்

# இருட்டுக் கடை அல்வா கடையை திடீரென பார்வையிட்டார்!

### பொதுமக்கள் – அல்வா கடையினருக்கு இன்ப அதிர்ச்சி!



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.2.2025) திருநெல்வேலி, கீழ ரத வீதியில் அமைந்துள்ள உலகப் புகழ்பெற்ற இருட்டுக்கடை அல்வா கடைக்கு நேரில் சென்று, அல்வாவினை வாங்கினார். உடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு ஆகியோர் உள்ளனர்.

திருநெல்வேலி,பிப்.8-

முதலமைச்சர் திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் 6.2.2025 மற்றும் 7.2.2025 ஆகிய நாட்களில் கள ஆய்வு மேற்கொண்டு பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்.

நேற்று முன்தினம் (6.2.2025) மாலை, திருநெல்வேலியில் பல ஆண்டுகளாக புகழுடன் விளங்கும் இருட்டுக்கடை அல்வா கடைக்கு திடீரெனச் சென்ற முதலமைச்சர் அவர்கள் கடை ஊழியர்களைக் கண்டு அல்வா தயாரிப்பு முறை, விற்பனை குறித்து விசாரித்து அறிந்து கொண்டார்கள். சற்றும் எதிர்பாராமல் முதலமைச்சர் அவர்கள் இருட்டுக்கடை அல்வா கடைக்கு வந்து தங்களுடன் பேசியது இன்ப அதிர்ச்சியாக இருந்தது என்று அல்வாக் கடையினர் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

அத்துடன் அந்தக் கடையில் கூடியிருந்த பொதுமக்களும் முதலமைச்சர் அவர்களைக் கண்டதும் ஆச்சரியம் கொண்டனர்.

முதலமைச்சர் அவர்கள் இவ்வளவு எளிமையாக எல்லோருடனும் நெருங்கி வந்து பழகுவது பெருத்த சந்தோசத்தை எங்களுக்கு ஏற்படுத்தியது என்றும் கூறி முதலமைச்சர் அவர்களை பாராட்டினார்கள்.

## அமெரிக்காவிலிருந்து இந்தியர்கள் கைவிலங்கிட்டு அழைத்து வரப்பட்ட விவகாரம்!

# நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்த எதிர்க்கட்சிகள் கோரிக்கை!

### நாடாளுமன்ற இரு அவைகளும் ஒத்திவைப்பு!

புதுடெல்லி, பிப். 8 -

அமெரிக்காவிலிருந்து நாடு கடத்தப்பட்ட இந்தியர்கள் கைவிலங்கிடப்பட்டு அழைத்து வரப்பட்ட விவகாரம் குறித்து விவாதம் நடத்த கோரி, காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் முழக்கமிட்டதால் இரு அவைகளும் ஒத்தி வைக்கப்பட்டது.

அமெரிக்காவில் இருந்து நாடு கடத்தப்பட்ட இந்தியர்களுக்கு கை, கால்களில் விலங்கிட்டு அழைத்து வரப்பட்ட விவகாரம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறிய இந்தியர்களை வெற்றிகரமாக திருப்பி அனுப்பி இருப்பதாக அமெரிக்க எல்லை காவல்படைத் தலைவர் மைக்கேல் டபிள்யூ. பேங்ஸ் வீடியோ ஒன்றை சமூக வலை தளத்தில் வெளியிட்டுள்ளது. இதனிடையே, இந்த விவகாரம் குறித்து விவாதம் நடத்தக்கோரி காங்கிரஸ் ஒத்தி வைப்பு தீர்மான நோட்டீஸ் வழங்கியது. நாடாளுமன்ற மக்களவை நேற்று தொடங்கியதும், இது குறித்து விவாதம் நடத்த வேண்டும் என காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் வேண்டுகோள் விடுத்தனர்.

ஆனால் மக்களவை சபாநாயகர் அவையை தொடர்ந்து நடத்தியதால் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் முழக்கமிட்டனர். இதனால் மக்களவை 12 மணி வரை ஒத்தி வைக்கப்பட்டது. இதே போல் மாநிலங்களவையில் எதிர்க்கட்சிகளின் கோரிக்கை ஏற்கப்படாததால், எதிர்க்கட்சியினர் முழக்கமிட்டனர். இதனையடுத்து மாநிலங்களவையும் பகல் 12 மணி வரை ஒத்தி வைக்கப்பட்டது.

இதனிடையே, நண்பகல் 12 மணிக்கு மக்களவை மீண்டும் கூடியபோது, இந்தியர்களை கைவிலங்கிட்டு அமெரிக்காவில் இருந்து திருப்பி அனுப்பிய விவகாரம் குறித்து விவாதிக்க வேண்டும் என காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சியினர் வலியுறுத்தினர். ஆனால், சபாநாயகர் மறுப்பு தெரிவித்ததால், காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்.பி.க்கள் முழக்கமிட்டனர்.

இதனையடுத்து மக்களவை பிற்பகல் 2 மணி வரை ஒத்தி வைக்கப்பட்டது. பின்னர், அவையில் இருந்து வெளியேறிய எதிர்க்கட்சியினர், இந்த விவகாரம் குறித்து விவாதம் நடத்தக்கோரி நாடாளுமன்ற வளாகத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மக்களவை எதிர்க்கட்சித்தலைவர் ராகுல்காந்தி, வயநாடு தொகுதி எம்.பி. பிரியங்கா காந்தி உள்ளிட்டோர் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### க. இராசாராம்

**பிப்ரவரி 8 (2008)**



சேலம் மாவட்டத்தில் தொடக்கக் காலத்தில் கழகத்தை வளர்க்க அரும்பாடுபட்டவர்.

திராவிட இயக்க மூத்த முன்னோடிகளில் ஒருவராகவும் – தந்தை பெரியார் அவர்களின் அணுக்கத் தொண்டர்களில் ஒருவராகவும் விளங்கினார்.

இரண்டு முறை நாடாளுமன்ற உறுப்பினராகவும், தலைவர் கலைஞர் அமைச்சரவையில் 1971ஆம் ஆண்டு முதல் 1976ஆம் ஆண்டு வரை அமைச்சராகப் பணியாற்றியவர்.

1980 முதல் 1984 வரை தமிழக சட்டமன்ற பேரவையின் தலைவராகவும் பணியாற்றினார்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் சிகிச்சைக்காக வெளிநாடு சென்றபோது இவரும் உடன் சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.